திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் நாட்றம்பள்ளியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், தொகுதி பொறுப்பாளர் வேலூர் ஜி.ரமேஷ்,மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதி ராஜன், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்ட மன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.வடிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நேற்று (22.05.2025) சென்னையில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான சர்வதேச உயிர்ப்பல்வகமை தினகருத்தரங்கில், வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் வனப் பொருட்கள், பல்வேறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைக் கொண்ட கண்காட்சி அரங்கையும் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்மற்றும் வனத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி மற்றும் கல்வி), மிதா பானர்ஜி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்) தெபாசிஸ் ஜனா,முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (தலைமை திட்ட இயக்குநர், தமிழ்நாடு உயிரிபன்மை பாதுகாப்பு, பசுமையாக்குதல் திட்டம் மற்றும் உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம்) அன்வர்தீன், தலைமை வனப்பாதுகாவலர், கீதாஞ்சலி, இவட மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

‘உலகெங்கும் கலைஞர்’ நூல்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, மே 23–

சென்னை வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் “உலகெங்கும் கலைஞர்” எனும் ஆய்வு நூலினை நேற்று (22.05.2025) காலை 10 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

திராவிட கழகத் தலைவர், கி. வீரமணி முதல் நூலைப் பெற்றுக் கொண்டார். இந்த நூலினை சென்னை வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும் சட்டக்கதிர் ஆசிரியர் வி.ஆர்.எஸ்.சம்பத் தொகுத்துப்பதிப்பித்துள்ளார்.

இந்த நிகழ்வில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகள் அவர்கள் தலைமை தாங்கினார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி மற்றும் திராவிட முன்னேற்றக் கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தி.மு.க.வின் சட்டப் பிரிவு தலைவர் ஆர். விடுதலை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வி.ஆர்.எஸ். சம்பத் அமெரிக்காவில் உள்ள ‘கென்சா’ பல்கலைக்கழகத்தில் ‘கலைஞர் பெயரில் இருக்கை’ தொடங்குவதற்கு அனுமதி பெற்றிருப்பதாகவும், அதற்கு தமிழ்நாடு அரசு நிதியுதவி வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். மேலும் கலைஞர் பெயரில் பன்னாட்டு நிலையில் விருது ஒன்றினை தோற்றுவிப்பதற்கான திட்டத்தினையும் முதல்வரிடம் அளித்தார்.

முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டை முன்னிட்டு அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் உள்ள கென்சா மாநில பல்கலைக்கழகத்தில் டாக்டர் கலைஞர் சமூக நீதி இருக்கை உருவாக்குவதற்கான அனுமதி பெற்று மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவரும் சட்டக்கதிர் ஆசிரியருமான டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் செய்துள்ளார்.

இதற்கான வைப்புத் தொகை மில்லியன் அமெரிக்க டாலர் மற்றும் திட்ட அமலாக்கத்துறை நிதியாக 0.5 மில்லியன் டாலர் தேவைப்படுகிறது.

முத்தமிழ் காவலர் கலைஞர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் சமூக நீதியை நிலை நாட்ட பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளார். பல செயல்பணிகளை செய்துள்ளார். தமிழ்நாடு மக்கள் அனைவருக்குமான சமூக நீதி பணிக் குறித்து பல திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். அவரது நினைவை போற்றும் வகையிலும் அவரது செயல்களை ஆராயும் வகையிலும் சமூக நீதி திட்டங்கள் குறித்து மேலும் ஆய்வுகளை நடத்திடவும் உலகம் முழுவதும் நிறைவேற்ற பல்வேறு வெளியீடுகள் கொண்டு வரவும், அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நகரில் அமைந்துள்ள கென்சா மாநில பல்கலைக் கழகத்தில் கலைஞர் மு.கருணாநிதி சமூக நீதி இருக்கை அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னை வளர்ச்சிக் கழகம் சார்பில் செய்யப்பட்டுள்ளது.

அதற்கான நிதி உதவியை தமிழ்நாடு அரசின் சார்பில் 1.5 மில்லியன் அமெரிக்கா டாலர் வழங்கிட முதல்வரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

10, பிளஸ் 1 துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்!

சென்னை,மே.23

தமிழகத்தில் மாநில பாடத் திட்டத்தில் பிளஸ் 1, பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான துணைத் தேர்வுகள் ஜூலை 4 முதல் நடைபெறவுள்ளது. இத் தேர்வுகளுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் 10 மற்றும் 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் கடந்த மே 16ஆம் தேதி வெளியானது. இந்த தேர்வுகளில் தோல்வி அடைந்தவர்களுக்கு உடனடியாக மறுவாய்ப்பு வழங்கும் வகையில் துணைத் தேர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கு நேற்று (மே 22ஆம் தேதி) வியாழக்கிழமை முதல் விண்ணப்பிக்கலாம் என அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

முன்னதாக, இது குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பில், பிளஸ் 1, பத்தாம் வகுப்புகளுக்கான துணைத் தேர்வு ஜூலை 4 முதல் ஜூலை 11 வரை நடைபெறவிருக்கிறது.

பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாத, தேர்வுக்கு வருகை புரியாத தேர்வர்கள் துணைத் தேர்வெழுத மே 22 (வியாழக்கிழமை) காலை 11 மணி முதல் முதல் ஜூன் 4ஆம் தேதி மாலை 5 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

மாணவர்கள் அவர்கள் பயின்ற பள்ளியில் விண்ணப்பிக்க வேண்டும். தனித்தேர்வர்கள் மாவட்ட வாரியாக அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

தேர்வுக்கட்டணம், இணைய பதிவு கட்டணத்தைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நாள்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் சிறப்பு அனுமதித் திட்டத்தில் (தட்கல்) உரிய கட்டணத் தொகையுடன் ஜூன் 5, 6 ஆகிய இரு நாள்களில் பள்ளி, சேவை மையங்களில் இணைய வழியில் விண்ணப்பிக்கலாம்.

சிறப்பு அனுமதிக் கட்டணம்

பத்தாம் வகுப்புக்கு சிறப்பு அனுமதி கட்டணம் ரூ.500 ஆகவும், பிளஸ் 1 வகுப்புக்கு ரூ.1,000ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டணத்திலிருந்து அரசு மற்றும் முழுமையான அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து தேர்ச்சி பெறாத, வருகை புரியாத மாணவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.

தேர்வு அட்டவணை

துணைத் தேர்வுக்கான கால அட்டவணை, அரசுத் தேர்வு சேவை மையங்களின் விவரங்கள், இணையதளத்தில் விண்ணப்பங்களை பதிவு செய்தல் குறித்த தனித் தேர்வர்களுக்கான தகுதி, அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட கிழக்கு தாம்பரம் 63 வது வார்டு எம். இ.எஸ்.ர.ரோடு மோதிலால் நகரில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 லட்சத்து 70,000 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை தாம்பரம் மேற்கு பகுதி (கு) செயலாளர் கி.வேலுமணி ஏற்பாட்டிலும் தாம்பரம் மேற்கு பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் தலைமையிலும் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், டி.ஆர்.கோபி மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக,நிர்வாகிகள் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் (கு) அமைப்பாளர்கள் பொதுமக்கள் மற்றும் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

உச்சநீதிமன்றமே இன்று கண்டித்துள்ளது!

பழிவாங்கும் நோக்கத்துடனே அமலாக்கத் துறை செயல்படுகிறது!

கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி!

சென்னை, மே 23-

பழிவாங்கும் நோக்கத்துடன் அரசியல் ரீதியான காழ்ப்புணர்ச்சியோடு, அமலாக்கத்துறை செயல்படுகிறது என்பதை உச்சநீதிமன்றமே இப்போது கண்டித்துள்ளது என்று தி.மு.க. சட்டத்துறைச் செயலாளரும் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான என்.ஆர்.இளங்கோ நேற்று அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவரது பேட்டி வருமாறு:-

முறையற்ற முறையில் உயர் அதிகாரிகளின் வீட்டில் சோதனை செய்வது , தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் சோதனை செய்வது உள்ளிட்ட முறையீடுகளை உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் மனு மூலம் தாக்கல் செய்யப்பட்டு விசாரனைக்கு வந்தது. வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள், அமலாக்கத் துறை தன்னுடைய வரம்பை மீறி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

தமிழ்நாடு அரசாங்கம் சார்பில், இதுபோன்ற செயல்கள் மாநில சுயாட்சிக்கு எதிரானவை என்பதைக் குறிப்பிட்டு ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தோம். அமலாக்கத் துறையின் இந்த நடவடிக்கைகள் எல்லாம் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என்பதையும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டி அமலாக்க துறையின் நடவடிக்கைக்குத் தடை விதித்துள்ளது. தடை விதித்தது மட்டும் அல்லாமல், அமலாக்கத் துறை தன்னுடைய வரம்புகளை மீறி செயல்படுகிறது என்பது இரண்டாவது முறையாகவும் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது.

அரசியல் காழ்ப்புணர்ச்சி!

எனவே தமிழ்நாடு அரசாங்கம் இத்தனை நாள் சொல்லி வந்த, அமலாக்கத் துறையின் செயல்பாடுகள் மாநில சுயாட்சிக்கு எதிரானவை; அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவை என்பதை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அமலாக்க துறையின் நடவடிக்கைகளுக்குத் தடை

விதித்துள்ளது.

எங்களின் வாதத்தின் போது, 2014-ஆம் ஆண்டு முதல் இப்போது வரை டாஸ்மாக் ஊழியர்கள் மீது கணக்கில் வராத பணம் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிவு செய்வார்கள். அதன் பிறகு அந்தப் பணத்திற்கு கணக்கு கொடுத்தால் அந்த வழக்கு முடித்து வைக்கப்படும். அதற்கு தகுந்த முகாந்திரம் சொல்லாவிட்டால் லஞ்ச ஒழிப்புதுறை மேல் நடவடிக்கையை எடுக்கும். அப்படி பார்க்கும்போது, பதியப்பட்ட 47 வழக்குகளில் பெரும்பாலான வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் உரிய விளக்கத்தை கொடுத்த பிறகு வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. சில வழக்குகளில் விடுதலையும் கிடைத்துள்ளது. இந்த வழக்குகளை முகாந்திரமாக வைத்துக் கொண்டு அமலாக்கத் துறை டாஸ்மாக் நிறுவனத்திற்கு உள்ளேயே சென்று ரெய்டு நடத்துவது முறையற்றது.

அமலாக்கத் துறை ஒரு வழக்கை எடுத்து விசாரிக்க வேண்டும் என்றால், அதற்கான மூல வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை மட்டும்தான் விசாரிக்க முடியும். 50 ஆயிரம் , 1 லட்சம் என கணக்கில் வராத பணம் வைத்திருந்தார்கள் என்ற வகையில் போடப்பட்ட மூல வழக்கை வைத்துக் கொண்டு அமலாக்கதுறை டாஸ்மாக் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு சென்று, அரசியல் காழ்ப்புணர்சி காரணமாக ரெய்டு நடத்தி 1,000 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருப்பதாக அரசியல்வாதிகள் போல அமலாக்கத் துறை அறிக்கை விடுவது சட்டத்திற்குப் புறம்பானது.

அதைத்தான் தமிழ்நாடு அரசாங்கமும் , தி.மு.க.வும் சொல்லிக்கொண்டே வந்தோம். அதை உச்சநீதிமன்றமும் இன்று ஏற்றுக் கொண்டு தடை விதித்துள்ளது.

அமலாக்கத் துறை அனைத்து வகையான வரம்புகளையும் மீறியுள்ளார்கள் என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. நடைமுறைச் சட்டம் , அரசியல் அமைப்பு சட்டம், மாநில சுயாட்சி போன்ற அரசியல் அமைப்பின் அடிப்படை தத்துவத்தையும் மீறி செயல்பட்டுள்ளார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்காக அமலாக்கத் துறை சட்டங்களை எல்லாம் துஷ்பிரயோகம் செய்துள்ளார்கள். இந்தக் காரணங்களால்தான் உச்சநீதிமன்றம் அமலாக்கத் துறை எல்லை மீறி செல்வதாகக் கூறியுள்ளது.

அமலாக்கத் துறையின் இந்த நடவடிக்கை ஏதோ ஒரு வழக்கை முகாந்திரமாகக் கொண்டு நடந்தது அல்ல. 2014-ஆம் ஆண்டு முதல் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் போடப்பட்ட 39 வழக்குகளையும், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு போடப்பட்ட 7 வழக்குகளையும் சேர்த்து அனைத்து வழக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து முதன்மை வழக்காக எடுத்துகொண்டுள்ளார்கள். இதில் அந்தந்த ஊழியர்களைப் பற்றி விசாரிக்காமல், டாஸ்மாக்கின் தலைமை அலுவலகத்தில் ரெய்டு நடத்தியதுதான் மாநில சுயாட்சிக்கு எதிரானது என கூறுகிறோம்.

சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அதிகாரிகள்!

அமலாக்கத் துறை நடவடிக்கை தொடர்பாக உச்சநீதிமன்றம் கொடுத்துள்ள இந்தத் தீர்ப்பு, இந்தியாமுழுமைக்குமான ஒரு தீர்ப்பாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். முதன்முறையாக உச்சநீதிமன்றம் அமலாக்கத் துறையைப் பார்த்து, மாநில சுயாட்சிக்கு எதிராக நீங்கள் நடக்கிறீர்கள் என கூறியுள்ளது. பா.ஜ.க. அல்லாமல், எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் அனைத்து மாநிலங்களுக்கும் இந்தத் தீர்ப்பு பொருந்தும்.

2026-ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலை ஒட்டி நடைபெறுவதுதான் இந்தச் சோதனைகள் என்பதை நாங்கள் சொல்லாமலே மக்கள் அறிவார்கள். உச்சநீதிமன்றம் இதை உன்னிப்பாகக் கவனித்து , அரசியல் ரீதியாக அமலாக்கத் துறை செயல்படுகிறது என்பதை உச்சநீதிமன்றமே இப்போது கூறியுள்ளது.

The Prevention of Money Laundering Act (PMLA)இன்படி, சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அதே சட்டத்தில் இடம் உள்ளது. அதைப் பயன்படுத்து உரிய நேரத்தில் உரிய நடவடிக்கையைத் தி.மு.க. எடுக்கும். மேற்கு வங்கம், டெல்லி என எதிர்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் அமலாக்கத் துறை, வருமானவரித் துறை போன்ற அமைப்புகளை அரசியல் பழிவாங்கலுக்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் ஆளுங்கட்சி நபர்கள் மீது ரெய்டு நடக்காமல், எதிர்கட்சிகள் மீது ரெய்டு நடத்தி, அவர்களை பா.ஜ.க.வில் இணைந்த பிறகு புனிதர்கள் ஆக்கப்பட்டு, அமலாக்கத் துறையின் நடவடிக்கை கைவிடப்படுகிறது.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. பேட்டியளித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை

பூ.து.ந.க.எண்.பி2 / 0826 / 2025 **இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் – 14 வார்டு 190ல் உள்ள தாம்பரம் வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள சாலையோர பூங்காக்கள் பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் மண்டலம் –8, 11 & 14 வார்டு 96, 97, 103, 151, 181, 182, 183, 186, 187, 190, 191 ல் உள்ள 26 எண்ணிக்கையிலான பூங்காக்கள் பழுதுபார்க்கும் மற்றும் மேம்படுத்தும் பணிகள் (சிப்பம் 21 to 24)

பணியின் மதிப்பு ரூ.33.82 முதல் ரூ.166.07 இலட்சங்கள் வரை

முன்வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **09.06.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **10.06.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2510 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)**

அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணனின் தலைமையில்

மீன்வளத் திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, மே 23-

மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் தலைமையில் 22.05.2025 அன்று கடல் மீனவர்களுக்கு மீன்பிடி தடை கால நிவாரணம், மீன்பிடிப்பு குறைவு கால சிறப்பு நிவாரணம், மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணம், மீனவ மகளீர் சேமிப்பு மற்றும் நிவாரணம், உள்நாட்டு மீன்வள மேம்பாட்டு திட்டங்கள் உள்ளிட்ட துறையின் பல்வேறு திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வுக் கூட்டம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மீனவர் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தவும் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகளை விரைந்து முடிக்கவும் அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, அரசுச் செயலாளர், டாக்டர் ந.சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், இரா.கஜலட்சுமி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில் இராயபுரம் சட்ட மன்ற தொகுதிக்கு உட்பட்ட பார்த்த சாரதி பிரதான தெரு, பார்த்தசாரதி 5, 6 வது தெரு, மற்றும் ஜமால் சௌக்கார் தெரு ஆகிய பகுதிகளில் புதிய மின் மாற்றிகள் அமைக்கும் பணியை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி துவக்கி வைத்தார். உடன் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், மாமன்ற உறுப்பினர் விஜயகுமார், விஜயலட்சுமி, வட்டச் செயலாளர்கள், எம்.ரவி, இரா.பாலன், எஸ்.புகழேந்தி, ஜே.கௌரீஸ்வரன்,உள்ளிட்ட மாவட்ட, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், மின்வாரிய அதிகாரிகளும், அலுவலர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.